# ஏப்ரல் 21 - உயிர்ப்பு ஞாயிறு

## ஆண்டவர் இயேசுவின் உத்தானப் பெருவிழா

"கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர்". (கொலோ 3:4)

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 10 : 34, 37 - 43

அந்நாளில் பேதுரு பேசத்தொடங்கி, "கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கிறேன். திருமுழுக்குப் பெறுங்கள் என்று யோவான் பறைசாற்றியபின்பு கலிலேயாமுதல் யூதேயா முழுவதிலும் நடந்தது உங்களுக்குத் தெரியும். கடவுள் நாசரேத்து இயேசுவின்மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்தால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார். யூதரின் நாட்டுப் புறங்களிலும் எருசலேம் நகரிலும் அவர் செய்த அனைத்திற்கும் நாங்கள் சாட்சிகள். மக்கள் அவரைச் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்றார்கள். ஆனால் கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பிக் காட்சி அளிக்கச் செய்தார். ஆயினும் அனைத்து மக்களுக்குமல்ல, சாட்சிகளாகக் கடவுள் முன் தேர்ந்துகொண்டவர்களுக்கு மட்டுமே, அவர் காட்சியளித்தார். இறந்த அவர் உயிர்த்தெழுந்தபின்பு அவரோடு உண்டு, குடித்த நாங்களே இதற்குச் சாட்சிகள். மேலும் வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நடுவராகக் கடவுளால் குறிக்கப்பட்டவர் இயேசுதாம் என்று மக்களுக்குப் பறைசாற்றவும் சான்று பகரவும் அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் அவரது பெயரால் பாவமன்னிப்புப் பெறுவர் என்று இறைவாக்கினர் அனைவரும் அவரைக்குறித்துச் சான்று பகர்கின்றனர்" என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம்.

## இரண்டாம் வாசகம் : கொலேசேயர் 3 : 1 - 4

சகோதரர், சகோதரிகளே! நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவாகளானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சாாந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்.

## நற்செய்தி : யோவான் 20 : 1 – 9

வாரத்தின் முதல் நாளன்று விடியற்காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார் கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன் பேதுருவிடமும் இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்றச் சீடரிடமும் வந்து, "ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை!" என்றார். இதைக்கேட்ட பேதுருவும் மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமித்து ஓடினர். மற்றச் சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து பார்த்தபோது துணிகள் கிடப்பதைக் கண்டார் ஆனால் உள்ளே நுழையவில்லை. அவருக்குப் பின்னாலேயே சீமோன் பேதுருவும் வந்தார். நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்குத் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பின்னர், கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச் சீடரும் உள்ளே சென்றார், கண்டார் நம்பினார். இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை.

**தியானம்:** அனைவருக்கும் உயிர்த்த யேசுவின் வாழ்த்துக்கள்!. யேசுவிற்கு கல்லோ கல்லறையோ தடையாக இருந்துவிடவில்லை. தடைக்கற்களை அகற்றி தாம் சொன்னது போல் அவர் உயிர்த்தெழுந்தார். மறைநூல் அறிஞர்களும், பரிசேயரும், சமுதாயத்தலைவர்களும் தமக்கு தலையிடியாக இருந்த ஒருவரை தமது சூழ்ச்சியினால் கொன்றார்கள். கோதுமை மணி மண்ணில் புதையுண்டு பெரு விருட்சமாக வளர்வதுபோல், யேசுவினால் கட்டப்பட்ட திருச்சபையும் வளரும் என்று அவர்கள் அறிந்திருக்க வில்லை. கல்லறையாலோ காவல் சேவகர்களாலோ யேசுவைக் காவல் காக்க முடியவில்லை. சர்வ வல்லமை பொருந்தியவருக்கு காவலா? கல்லறையை விட்டு வெளிவர முடிந்த அவரால் அவரது தண்டனையில் இருந்து வெளிவர முடியாமல் போனது ஏன்? எமது பாவங்கள் அதற்கு தடையாகிப் போனது. எம் பாவங்களை தனிமனிதனாக அவர் தம் தோளில் சுமந்தார். நிந்தை அவமானங்கள் பட்டார். சிலுவையை வெற்றி கொண்டார். அஸ்த்தமனங்கள் எல்லாம் முடிவல்ல. அது ஆரம்பம். இன்னொன்றின் தொடக்கம். இறையாட்சி மலர யேசுவின் அஸ்த்தமனம் தேவையாக இருந்தது. சீடர் யேசுவுடன் இருந்த காலங்களில் என்ன செய்தார்கள்?. யேசு செல்லும் இடம் எல்லாம் சென்றார்கள். அவர் சொல்வதை கேட்டார்கள், செய்வதை கண்டார்கள் அவரை விட்டு விலகி செல்ல வில்லை. எவ்வாறு பெற்றோர் தமது பிள்ளைகளை சிறு வயதில் பராமரிப்பார்களோ அவ்வாறு அவர்களை பராமரித்தார். தமது அரசைப் பறைசாற்ற யேசு அவர்களை தயார்படுத்தினார். காலம் வந்த போது அவர்களை விட்டு சென்றார். செல்லும்போது மறக்க முடியாத அழியாத நினைவுகளை விட்டு சென்றார். எம் குடும்பங்களில் இருந்து யாராவது இறந்துபோனால் , அவர்கள் விட்டு சென்ற பல அழியாத நினைவுகள் அடிக்கடி எம் மனதில் தோன்றும் அல்லவா? அவ்வாறான நினைவை அவரும் சீடருக்கு விட்டு சென்றார். அவரின் வாழ்வு சீடரை வழிநடத்தியது. பயத்தை அகற்றியது. துணிவைக் கொடுத்தது. திருச்சபை பெரு விருட்சமாக வளர்ந்தது. தவக்காலத்தில் எம்மிடம் இருந்த பல பழக்கங்களை, குறிப்பாக புகைப்பதை, மதுபானம் பாவிப்பதை விட்ட நாம் இனி அதனை மீண்டும் தொடங்கப் போகின்றோமா? யேசுவின் உயிர்ப்பு அதற்கான ஆரம்ப விழாவா? அல்லது அதனை கல்லறைக்குள் புதைக்கப் போகின்றோமா? திருச்சபை என்ற பெரிய மரத்தில் இளைப்பாறும் பறவைகளாக இல்லாமல், அதனை வளர்க்கும் பசளைகளாக, உரமாக நாம் மாற வேண்டுவோம்.